**CC.No.261/2014 (JM.No.II, DHARMAPURI)**

**22.01.2026**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரிகள் ஆஜர்)**

**PW– 9 : திரு. கவின் (மருத்துவர்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது பாப்பிரெட்டிபட்டி அரசு மருத்துவமனையில் முதுநிலை உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.05.2014 அன்று அரசு தருமபுரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவராக இருந்த போது பெருமாள், வயது 26 த/பெ. மாரியப்பன் என்பவரை வீரராகவன் என்பவர் சிகிச்சைகாக அழைத்து வந்தார். அவரை விசாரித்த போது அவருக்கு தெரிந்த 5 நபர்கள் அன்றைய தினம் இரவு 09.00 மணியளவில் கட்டையால் தாக்கியதாக சொன்னார்கள். அவருக்கு முதலுதவி அளித்து உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். அவரை பரிசோதித்ததில் கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன. 1. வலதுபக்க முன் கையில் வலியுடன் கூடிய வீக்கம் காணப்பட்டது. அவருக்குஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். அந்த பெருமாளின் காயச்சான்றிதழ் **அ.த.சா.ஆ.4** ஆக குறியீடுசெய்யப்படுகிறது. மேலும் அதே வழக்கில் சம்பந்தமுடைய கண்ணன், வயது 37 த/பெ. மாரியப்பன் என்பவரை அவரது தந்தை மாரியப்பன் என்பவர் அன்றைய தினமே சிகிச்சைகாக அழைத்து வந்தார். அவரை விசாரித்த போது அவருக்கு தெரிந்த 4 நபர்கள் அன்றைய தினம் இரவு 09.00 மணியளவில் கட்டையால் தாக்கியதாக சொன்னார்கள். அவருக்கு முதலுதவி அளித்து உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். 1. அவருக்கு இடதுபக்க தலையில் 5x1.x0.5 cm என்ற அளவில் கிழிந்த காயம் காணப்பட்டது. 2. வலதுபக்க தோள்பட்டையில் 10x5x5 cm என்ற அளவில் கண்ணிய காயம் காணப்பட்டது. மேலும் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். அவருக்கு CT Scan எடுக்கப்பட்டதில் அடிபட்டதால் எந்தவித எலும்பு முறிவும் ஏற்படவில்லை. அவருக்கு ஏற்பட்ட காயம் 1 மற்றும் 2 சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். அந்த கண்ணனின் காயச்சான்றிதழ் **அ.த.சா.ஆ.5** ஆக குறியீடுசெய்யப்படுகிறது. மேலும் அதே வழக்கில் சம்பந்தமுடைய சக்தி, வயது 28(ஆண்) த/பெ. மாரியப்பன் என்பவர் சிகிச்சைகாக சேர்ந்தார். அவரை விசாரித்த போது அவருக்கு தெரிந்த 4 நபர்கள் அன்றைய தினம் இரவு 09.00 மணியளவில் கட்டையால் தாக்கியதாக சொன்னார்கள். அவருக்கு முதலுதவி அளித்து உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன. 1. இடதுபக்க இடுப்பு பகுதியில் வலியுடன் கூடிய வீக்கம் காணப்பட்டது. 2. கழுத்து பகுதியில் வலியுடன் கூடிய வீக்கம், 3. இடதுபக்க தோள்பட்டையில் வலியுடன் கூடிய வீக்கம் காணப்பட்டது. அவருக்கு நுண்கதிர்படம் எடுக்கப்பட்டது. அதில் எந்தவித எலும்புமுறிவும் இல்லை. அவருக்கு ஏற்பட்ட 1,2,3 காயங்கள் சாதாரண காயங்கள் என்று சான்று வழங்கினேன். அந்த சக்தியின் காயச்சான்றிதழ் **அ.த.சா.ஆ.6** ஆக குறியீடுசெய்யப்படுகிறது. இந்த வழக்கு குறித்து போலிஸார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

பெருமாள், கண்ணன், சக்தி ஆகியோர்களின் காயங்களின் நிறம் மற்றும் வயதை நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பெருமாள் மற்றும் கண்ணன் ஆகியோர்கள்

என்னிடம் சிகிச்சைக்கு சேர்ந்த போது முதுகு பகுதியிலோ மற்றும் இடது கால் பகுதியிலோ காயம் இருந்ததாக என்னிடம் கூறவில்லை என்றால் சரிதான், கூறியிருந்தால் காயச்சான்றிதழில் குறிப்பிட்டு இருப்பேன். சக்தி என்பவருக்கு உடலின் மேற்பகுதியில் காயங்கள் ஏதும்இல்லை என்றால் சரியல்ல, வீக்கம் இருந்தது. மேற்படி வீக்கத்தின் அளவு ஏதும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மூன்று பேருக்கும் ஏற்பட்ட காயங்கள் கரடு, முரடான பாதையில் இரவு நேரத்தில் வரும் போது தவறி விழுந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.01.22 17:24:09 +0530